# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,599 — 1965 දෙසැම්බර් 29 වැනි බදාදා — 1965.12.29

14,599 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ—பீ. 10/59

### 1959 ம் ஆண்டின் 16 ம் இலக்கத் தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டம்

1959 ம் ஆண்டின் 16 ம் இலக்கத் தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 4(1)(ஆ) என்னும் பிரிவின் கீழ் வர்த்தக, வியாபார அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

எம். வீ. பீ. பீரிஸ்,
வர்த்தக, வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 28 ந் உ.

**கட்டளை**

இதற்குள்ள அட்டவணையின் முதலாம் நிரையிற்றரப்பட்டுள்ள ஒவ்வொரு தரத்தினையுமுடைய தேயிலை சம்பந்தமான 1959 ம் ஆண்டின் 16 ம் இலக்கத் தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 4(1) என்னும் பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பிடப்பட்ட முற்பணமானது 1966 ஜனவரி முதலாந் தேதியிலிருந்து அவ்வட்டவணையின் இரண்டாம் நிரையில் அதற்கு இயைபான பதிவில் தரப்பட்டுள்ள வீதத்தின்படி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

1959 ஜூன் 1 ம் தேதிய 11,756 இலக்க அதிவிசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டின் 16 ம் இலக்க தேயிலை (வரிவிதித்தலும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தலும்) சட்டத்தின் 4(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை இதனால் நீக்கப்படுகிறது.

**அட்டவணை**

| நிரை 1 | நிரை 2<br>இறாத்தல் ஒவ்வொன்றுக்கும் சதம் |
|---|---|
| மலைப்பிரதேசத்துத் தேயிலை .. | நாற்பது |
| இடைப்பிரதேசத்துத் தேயிலை .. | பத்து |
| கீழ்ப்பிரதேசத்துத் தேயிலை .. | பத்து |

12-1662


இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.